# இதய காணிக்கை இரவாத காணிக்கை

இதய காணிக்கை இரவாத காணிக்கை
இறை மனித உறவின் சின்னமாய்
அன்பின் காணிக்கை
இறையே இதை ஏற்றிடுவாய்
உனதாய் என்னை மாற்றிடுவாய் - ( 2 )

**1**
மேகங்கள் கூடிடவே
வான் மழை அருவியாகுமே
உன் அருளுக்கு சான்றாகுமே
இறைவா உன்னைப் போல்
வார்த்தையை வாழ்வாக்கி
வழிகாட்டி சென்றிட வரம் ஒன்று தா

( இதய ...)

**2**
எண்ணங்கள் உயர்ந்திடவே
உள்ளங்கள் கோவிலாகவே
நல் வாழ்வு அதன் பரிசாகுமே
கருணா உன்னைப் போல்
மாறாத அன்பினால்
அயலாரை நேசிக்கும் நல் உள்ளம் தா

( இதய ...)